

# புனித லூர்து மாதா தேவாலயம்

45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா
**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org



**திருத்தந்தையின் கருத்து** : **கிறிஸ்துவ ஒருமைப்பாடு: எல்லா கிறிஸ்தவர்களும் திருச்சபை ஒன்றிப்பை மீண்டும் நிலைநிறுத்த செபத்திலும், சகோதரத்துவ தர்மத்திலும் உழைக்கவும், ஒத்துழைப்பினால் மனுக்குலம் எதிர்நோக்கும் சவால்களை சந்திக்கவும் ஆண்டவரின் படிப்பினைக்கு விசுவாசமாய் இருக்க வேண்டுமென்று**

**ஜனவரி மாத கரு** : **இறையரசுக்கான கடவுளின் கொடை**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜன 15 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்கால 2ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 2ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |
| ஜன 19 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| ஜன 20 வெள் | மாலை 7.00 | புகழாராதனை/ திருப்பலி (த) | புனித பேபியன், செபஸ்டியன் (முனிசிபல் சிற்றாலயம்) |
| ஜன 21 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித ஆக்னஸ் |
| | காலை 11.00 | திருமணம் (ஆ) | ஜோன் போல் ஜீவன் ஜோசப் & ஏனா கிளமென்ட் சால்ஸ் |
| | மாலை 4.30 | திருமணம் (த) | சால்ஸ் சாலமோன் & கிறிஸ்டினா பரமேஸ்வரி |
| ஜன 22 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | மறைக்கல்வி ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | மறைக்கல்வி ஞாயிறு |
| | காலை 11.00 | திருப்பலி (ம) | மறைக்கல்வி ஞாயிறு |
| | மாலை 5.30 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| ஜன 15 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| | மாலை 7.30 | ஜெலாப்பாங் | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய செயற்குழு கூட்டம் |
| ஜன 16 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| ஜன 17 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை செபம் |
| | மாலை 7.45 | பெர். மை 1-3 | நற்கருணை பணியாளர் கூட்டம் |
| | மாலை 8.00 | முனிசிபல் | அருங்கொடை (த) |
| ஜன 18 புதன் | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| | மாலை 8.00 | புந்தோங் தீகா | அருங்கொடை (த) |
| ஜன 19 வியா | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மை 1-1 | பங்கு பணிக்குழு ஒன்றுகூடுதல் |
| ஜன 20 வெள் | மாலை 8.00 | ஜெலாப்பாங் | அருங்கொடை (த) |
| | மாலை 8.00 | புந்தோங் தீகா | இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| ஜன 21 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜன 22 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |

<u>ஜனவரி & பிப்ரவரி மாத திருமணங்கள் 2017 (புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ பங்கில்)</u>

ஜன 28 மாலை 4.30 திருமணம் (ஆ) ரேமன்ட் கெய்த் த/பெ ஜேசுதாஸ் & யுனிசா த/பெ A. கமலதாஸ்
ஜன 30 மாலை 4.30 திருமணம் (த) ஸ்டீவ் டென்னிஸ் த/பெ டேவிட் & வெரோணிக்கா த/பெ டேவிட்
பிப் 3 மாலை 4.30 சடங்கு (த) அன்பரசன் த/பெ அர்ஜூனா & கிளாரா த/பெ பிரான்சிஸ் சேவியர்

<u>புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ (பங்கினர் வெளியூரில் திருமணம்)</u>

ஜன 27 காலை 11.00 திருமணம் (த) பெனடிக் பன்னீர் த/பெ மைக்கல் & எஸ்தர் த/பெ மார்ட்டின் செபஸ்டியன்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

1. **பாரம்பரிய காட்சியகம்:** திரு. அந்தோணி தைரியநாதன் தவராஜ் (A. D தவராஜ்) புகைப்படத்தையும் சரித்திரத்தையும் அளித்த குமாரி. பெலிசியா ஜெரால்டின் அலெக்சிஸ் மற்றும் அவரது குடும்பத்தார்க்கும் நாங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இவர் தேவாலயத்தின் கட்டுமான பணியின் போது கௌரவ தொழில்நுட்ப ஆலோசகராக இருந்தார்.

2. **24 மணி நேரம் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் அனுபவத்தில் வாழ்தல்:** SPM & அதற்கு மேல் முடித்தவர்களுக்கும் தனித்த இளைஞர்களுக்கும் பொதுவானது. இந்த நிகழ்வு இறைப் பணி மற்றும் குருத்துவ தேவழைத்தலை கண்டறிய ஆர்வமுள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. 4 ~ 5 பிப்ரவரி 2017 முதல் ஒவ்வொரு மாதமும் முதலாவது சனி மற்றும் ஞாயிறு மதியம் 12 மணி ~ மதியம் 12 மணி வரை நடைபெறும். இடம் பதிவின் போது தெரிவிக்கப்படும். கட்டணம் இல்லை. தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். தொடர்புக்கு: வின்செண்ட் ஜோசப் PDPI (04-2611350) அலுவலக நேரம் திங்கள் - வெள்ளி அல்லது மின்னஞ்சல் pdpi2005@gmail.com

3. **மறைமாவட்ட குருத்துவத்திற்கான பங்கு தேவழைத்தல் கருத்தரங்கு: நாள்:** 21/1/17 (சனி) **நேரம்:** காலை 9.00~2.00 (உணவு வழங்கப்படும்) **இடம்:** பெர். மையம் **வயது:** 16 & அதற்கு மேல், ஆண்கள் மட்டும். பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவுசெய்யலாம்.

4. **மேய்ப்புப்பணி பயிற்சிக்காக ஒரு குருத்துவ கல்லூரி மாணவர்:** சகோ. ஜோர்ஜ் வைத்தியநாதன் பினாங்கு குருத்துவ கல்லூரியில் தனது புகுமுக ஆண்டை முடித்து இறையியல் கல்விக்காக காத்திருக்கிறார் (2 வருடம்). தற்போது அவர் இந்த பங்கில் ஒரு மாதம் மேய்ப்புப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

5. **பங்கு பணிக்குழு ஒன்று கூடுதல்:** அனைத்து பங்கு பணிக்குழு தலைவர்களும், துணைத் தலைவர்களும் இந்த சிறப்பு பணிக்குழு ஒன்றுகூடுதலுக்கு கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள். அனைத்து பங்கு பணிக்குழுக்களையும் பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும். **நாள்:** 19/1/16 (வியா) **நேரம்:** மாலை 8.00 **இடம்:** பெர். மை 1-1

6. **கிறிஸ்துவ தியானம்:** கிறிஸ்துவ தியானத்தை பற்றிய அறிமுகம் 6 வாரம் இந்த வகுப்புகள் நடைபெறும். **இடம்:** புனித மைக்கல் ஆலயம் @ புனித பிரான்சிஸ் சேவியர் அறை **நாள்:** 12 பிப்ரவரி 2017 முதல் ஒவ்வொரு ஞாயிறும் **நேரம்:** மாலை 2.00 ~ மாலை 4.00 **பதிவு கட்டணம்:** ரிம 5.00 மொத்த வகுப்புகளுக்கு (இது வகுப்பின்போது குறிப்புகள் கொடுப்பதற்காக) **தொடர்புக்கு:** ஸ்டீவன் பூ (012-5552638)/ தெரேசா பெர்னான்டஸ் (016-4577199)

7. **காலை சிற்றுண்டி:** புலுமா மகளிர் குழு 22/1/17 (ஞாயிறு) காலை 7 மணி & 9 மணி திருப்பலிகளுக்கு பிறகு காலை சிற்றுண்டியை விற்பனை செய்வார்கள். இந்த நிதி சர்வ தேச பெண்கள் தினம் 12/3/17-க்காக திரட்டப்படுகிறது. தயவுசெய்து ஆதரவு தரவும்.

8. **தகவலுக்கான கோரிக்கை:** ஈப்போ லூர்து பாரம்பரிய காட்சியகம் பின்வரும் தகவல்களை சேகரிக்கிறது. அ) **M. Dawson**, 1959-ல் பீடத்திற்கு மேலுள்ள 4 சித்திர வேலைப்பாட்டு கண்ணாடிகளுக்கு வர்ணம் தீட்டிய தனி நபர் ஆ) பளிங்கு பீட மேடை மற்றும் பளிங்கு சுவர் பற்றிய மேல் அதிக தகவல்கள் இ) **திரு. K. அருளானந்தம்,** திரு பிலிப்ஸ் எட்ரியன் பெரிஸ் (P. A. பெரிஸ்) M. B. E.. உடன் இணைந்து பணியாற்றிய ஆலய கட்டிட வடிவமைப்பாளர்.

9. **மாபெரும் விற்பனை:** அவே சிற்றாலய கட்டிட நிதிக்காக நாங்கள் மாபெரும் விற்பனைக்கு ஏற்பாடு செய்கிறோம். நாங்கள் கதை புத்தகங்கள், கண்ணாடிப் பொருள்கள், நினைவுப்பொருள்கள் போன்ற அழகிய அன்பளிப்பு வகைகளை சேகரிக்கிறோம். கண்டிப்பாக ஆடைகள் வேண்டாம்!!! **15/1/17 & 22/1/17 ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு வாங்கிக்கொள்ளலாம்.**

10. **ஆலயத்தினுள் அடிப்படை உடையணிதலும், நல்லொழுக்கமும்:** நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உடையணிவதில் பெருமை கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு மிகச்சிறந்தவற்றை வழங்க வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ, கையில்லாத பனியன்களோ கூடாது. திருப்பலியின்போது கைப்பேசிகள் பயன்படுத்துவதை நிறுத்தவும். அப்படி அவசரமாக பேச வேண்டியிருந்தால் தயவு செய்து வெளியே செல்லவும், இதனால் மற்றவர்களால் செபிக்க இயலும். திருப்பலியின்போது மின்னியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டாம். மருத்துவ தேவையைத் தவிர்த்து ஆலயத்தில் இனிப்புகளையோ, மெல்லும் கோந்தையோ உட்கொள்ளாதீர்கள். இது புனிதமான ஆலயம் என்ற உங்களின் உணர்வை இழக்காதீர்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் மேற்படி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள்.

11. **எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துக்கொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். அப்படி ஒரு வேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

12. **விசுவாசத்தைக் கைவிடுதல்:** பிற கிறிஸ்துவ சபைகளில் அல்லது பிற மதத்தில் சேருவதற்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகியவர்கள் உங்களின் செய்கையினால் கத்தோலிக்க உரிமைகளை இழக்கின்றீர்கள்.

13. **கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி டிசம்பர் 2016 வரைக்கும்:**
கிறிஸ்து அரசர் சிற்றாலயம் - 216,889.38 அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - 240,540.31 (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**புதுவருட வசூல்கள்:** புதுவருட முதலாம் வசூல் மொத்தம்: ரிம 10,068.30 புதுவருட இரண்டாம் வசூல் மொத்தம்: ரிம 5,300.60
திருக்காட்சி முதலாம் வசூல்- ரிம 3,259.75 திருக்காட்சி இரண்டாம் வசூல்- ரிம 1,678.95 தாசேக்- ரிம 139.50 மாதச்சந்தா- ரிம 2,170.00